விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 176 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 30 வெள்ளிக்கிழமை (13.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# குஜராத் அகமதாபாத்தில் விமானம் கீழே விழுந்து நொருங்கி கோர விபத்து

(அகமதாபாத்)

- சுமார் 240 பேர் உயிரிழப்பு.
- விபத்து நடைபெற்ற இடத்தில் 204 சடலங்கள் நேற்று இரவுவரை மீட்பு.
- குஜராத் முன்னாள் முதலமைச்சரும் விமான விபத்தில் பலி.
- ஒரு பயணி உயிரோடு தப்பியுள்ளார்.
- விமானம் மருத்துவ கல்லூரியில் மோதியதில் 5 மாணவர்கள் உயிரிழப்பு.

(04ஆம் பக்கம் பார்க்க)





# யாழ்.மாநகர சபையின் கன்னி அமர்வு இன்று

## முதல்வர் பதவிக்கு மும்முனைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் முதல்வரை தெரிவு செய்வதற்கான கன்னி அமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்.மாநகர சபை சபா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி ஆகியன முதல்வர் பதவிக்காக போட்டியிடவுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்ட கற்கோவளம் இராணுவ முகாமுக்கு அருகில்

### மண்டையோட்டுடன் கூடிய மனித எச்சங்கள் அடையாளம்



(கரணவாய்)

பருத்தித்துறை, கற்கோவ 15ஆம் பக்கம் பார்க்க

## டைனமற் வெடிமருந்துகள் குருநகரில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியிலிருந்து ஒரு தொகை டைனமற் வெடிமருந்துகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த 15ஆம் பக்கம் பார்க்க

## 400 போதை மாத்திரைகளுடன் சாவகச்சேரியில் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை சோலையம்மன் கோவில் பகுதியை அண்மித்து 400 போதை மாத்திரைகளுடன் நேற்று வியாழக்கிழமை 15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி காணி உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு அல்லது மாற்றுக் காணிகள்

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை அமைந்துள்ள தனியார் காணி உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு அல்லது மாற்றுக் காணிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா - மன்னார் வீதியில் மோ.சைக்கிள் விபத்து

### மூவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - மன்னார் வீதியில் காமினி மகா வித்தியால 15ஆம் பக்கம் பார்க்க

## பேராசிரியர் தில்லைநாதன் காலமானார்



(கொழும்பு)

தகைசார் தமிழ்ப் பேராசிரியர் சி.தில்லைநாதன் (88) நேற்று கொழும்பில் 15ஆம் பக்கம் பார்க்க

## நாகப்பட்டினம் - கே.கே.எஸ் கப்பல் சேவைக்கு இந்தியா நிதியுதவி


(கொழும்பு)

நாகப்பட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையே மேற்கொள்ளப்பட்டு வரும் பயணிகள் கப்பல் சேவையை, மேம் 04ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நேர்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
19.10.1941

மறைவு
15.05.2025

கடந்த 15.05.2025 வியாழக்கிழமைஅன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் தலைவர்

## அமரர் ஆறுமுகம் செல்லக்கண்டு (ராசநாயகம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.06.2025) சனிக் கிழமை காலை 5 மணியளவில் ஊறணி தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தயவு கூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

உதயசூரியன் கடற்கரைவீதி,
மதவடி, வல்வெட்டித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
077 815 7250

(4475)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 4, சங்கிலியன் வீதி, 44/25 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மனோரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் கனகேஸ் சதீஸ் அவர்கள் 11.05.1983ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு இராஜேஸ்வரன் தங்கராஜா முகதாவில் 107ம் இலக்க அறுதி உறுதி மூலம் மனோரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியமிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் வைரமுத்து சக்திவேலும் பெண் மனோரஞ்சிதமலர் மூலம் 08.01.2024ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சுகனியா கணேசலிங்கம் முகதாவில் 1178ம் இலக்க அறுதி உறுதி மூலம் பாலசுப்பிரமணியம் இரத்தின சேகரும் ரதிதேவிக்கும் வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் பிரிவு நல்லூர் கோவிற்பற்று, நல்லூர் இறை "கொண்டவாலி வளவும் பொட்டன் வளவும்" நிலப்பரப்பு 1 ஒன்றும் வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் இது 1982.07.01ந் திகதி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ்.இராமநாதனால் அளந்து வரையப்பட்ட 22ம் இலக்க நிலஅளவைப்படத்தில் 1ம் துண்டாக சுட்டப்பட்டுள்ளது.

இதற்கு எல்லை :-

கிழக்கு : ஒழுங்கை
வடக்கு : தருமலிங்கம் பரமராஜாவும் பெண் இராகுபதிதேவியும், அமரசிங்கம் கைம்பெண் மகேஸ்வரிக்கும் சொந்தமான மிகுதி ஆதனம்
மேற்கு : சின்னத்துரை பெண் தவமணியினாதனம்
தெற்கு : சுப்பிரமணியம் மகேந்திரராஜாவின் ஆதனம். இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை பாலசுப்பிரமணியம் இரத்தினசேகரும் ரதிதேவிக்கும் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பாலசுப்பிரமணியம் இரத்தினசேகரும் ரதிதேவிக்கும் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(C-3188)



யா/வட இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகப் பட்டதாரியுமான திருமதி இந்திராணி முரளிதரன் பருத்தித்துறை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபராக நேற்று கடமைகளை பொறுப்பேற்றார்.

# அந்தியேட்டிக் கிரியைகள் பிற்போடல்



கடந்த 15.05.2025 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

## சிவஞானம் சிவயோகராணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 14.06.2025 சனிக்கிழமை இடம்பெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்பு அறிவிக்கப்படும்.

"சக்தி நிலையம்",
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தொடர்புகளுக்கு :
சிவபாதம் – சிவகுருநாதன்
077 434 8904

(C-3192)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 13 கலீமா வீதி, ஆதன இல (28P1) 26/7 லொட் 04, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் நைனா மொகமட் அயூப் பெண் சலீமாவும் பிள்ளைகளும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை நைனா மொகமட் அயூப் பெண் சலீமா, நைனா மொகமட் அயூப் மகள் றயீசா, நைனா மொகமட் அயூப் மகள் அமீனா, மொகமட் அப்துல்லா மொகமட் மஹறும் பெண் சனூமா 07.01.1982 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் மொகைதீன் மன்சூர் முகதாவில் 1651ம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் நைனா மொகமட் அயூப் மகள் அமீனா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை நைனா மொகமட் அயூப் மகள் அமீனா 25.10.2010 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் சுல்தான் பலீல் முகதாவில் 54ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் ஹசான் பெண் ஜனூஸ் ஜமாலியா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை பெமினா பெனாசிர் பலில் தஸ்னீம் 30.05.2018 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராஜரட்ணம் ரகுராஜா முகதாவில் 9660ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் ஹசான் பெண் ஜனூஸ் ஜமாலியா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

ஹசான் பெண் ஜனூஸ் ஜமாலியா 17.11.2018ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராஜரட்ணம் ரகுராஜா முகதாவில் 9940ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில், உறுதியில் சொல்லப்பட்ட விபரங்களுக்கமைய இவ்வாதனமானது தனக்கே உரித்தானது என வெளிப்படுத்துபவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹசான் பெண் ஜனூஸ் ஜமாலியா 11.03.2019 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் அலியாஸ் மொகமட் அர்சிக முகதாவில் 09ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் ஜஹான் ஹஸன் மகள் ஹஸீனா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/87ம் இலக்க கிராமஅலுவலர் பிரிவில் "பரந்தன் புளியடி" நிலப்பரப்பு குளி 12.10 (குளி பன்னிரண்டு தசம் பத்து) உத்தரவு பெற்ற நில அளவையாளர் மைவின் ஞானப்பிரகாசம் அவர்களால் 19.12.2018ம் திகதி அளந்து விபரித்த 3366ம் இலக்க படத்தின்படி துண்டு-4.

இதற்கு எல்லைகள் :-

கிழக்கு: துண்டு - 5
வடக்கு: தனிப்பட்ட பாதையும், ரி.மயில்வாகனம், மறுபேரின் ஆதனமும். துண்டு 2
மேற்கு: துண்டு - 3
தெற்கு: அப்துல் மயீட் கைம்பெண் ஜமீலாவினதும் மறுபேரினதும் ஆதனம். இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தைத் ஜஹான் ஹஸன் மகள் ஹஸீனா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது ஜஹான் ஹஸன் மகள் ஹஸீனா என்பவர் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(C-3190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பதிவான கொவிட் மரணங்கள்

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

**(கொழும்பு) நாடு முழுவதும் பரவி வரும் கொவிட் திரிபினால் பாதிக்கப்பட்டு இதுவரை இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**


சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட வடமேல் மருத்துவ பீடத்தின் தலைமை மருத்துவப் பேராசிரியர் துஷாந்த மெதகெதர இதனைத் தெரிவித்தார்.

இலங்கை தொற்று நோயியல் பிரிவு தகவலின்படி, சுவாச நோயாளிகளில் 9% முதல் 13% வரை தற்போது புதிய கொவிட் திரிபினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கொவிட் தொற்று மிகக் குறைந்த தீவிரத்தன்மை கொண்டது. இதனால் ஏற்படும் தாக்கம் மிகக் குறைவு.

ஆனால் 65 வயதுக்கு மேற்பட்ட நோயாளிகளுக்கும் பலவீனமான நோயெதிர்ப்பு சக்தி கொண்டவர்களுக்கும் இது தீவிரமாக இருக்கலாம். இவ்வாறானவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். என தெரிவித்தார். (நி-8)

# முன்னாள் ஜனாதிபதி ரஷ்யா விஜயம்



(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை ரஷ்யாவிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ள அவர் 22 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். (நி-8)

# மின் கட்டண அதிகரிப்பிற்கு கடும் எதிர்ப்பு

## போராட்டத்தில் குதிக்கவுள்ள நுகர்வோர் சங்கம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டண அதிகரிப்பிற்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக இலங்கை மின்சார நுகர்வோர் சங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட 15% மின்சாரக் கட்டண உயர்வை கடுமையாக எதிர்ப்பதாகவும், இது நியாயமற்றது எனவும் மின்சார நுகர்வோர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சஞ் சீவ தம்மிக தெரிவித்துள்ளார்.


இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 'நியாயமான செலவுத் தொகை' என்ற கொள்கையை சரியாக பின்பற்றியிருந்தால், இந்த உயர்வு சாத்தியமே இல்லை.

இந்த முடிவை எங்களது சங்கம் வலுவாக எதிர்க்கிறது. எதிர்வரும் நாட்களில் மக்களுடன் இணைந்து போராட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் முடிவு நாட்டின் நலனுக்கோ, மக்களின் நலனுக்கோ அல்ல எனவும் இது சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தத்தால் எடுக்கப்பட்டது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

# சிறுவர்களை காய்ச்சலுடன் பாடசாலைக்கு அனுப்பாதீர்கள்!

## பெற்றோர்களிடம் கோரிக்கை



(கொழும்பு)

சிக்குன்குனியா மற்றும் டெங்கு ஆகிய இரு நோய்களும் ஒரே நேரத்தில் ஏற்படும் நிலைமை காணப்படுவதாக, சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் மகேஷ்க ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர், இது ஒரு ஆபத்தான நோய் அல்ல என்ற போதிலும் சிறுவர்கள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நோய் நிலைமை ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் காய்ச்சல் ஏற்பட்டுள்ள சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதனை தவிர்க்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரம், 2 நாட்களுக்கு மேலாகக் காய்ச்சல் நிலைமை தொடருமாயின் உரிய வைத்தியரை நாடுமாறும் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் மகேஷ்க ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சிறுவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதன் ஊடாக, ஏனைய மாணவர்களுக்கும் நோய் நிலைமை பரவுவதற்கான சாத்தியம் நிலவுகிறது.

இன்புளுவென்சா போன்ற வைரஸ் விரைவாக சிறுவர்களிடத்தே பரவக் கூடிய சாத்தியம் நிலவுகிறது. காய்ச்சலுடன் எலும்பு மூட்டுக்களில் அதிக வலி உணரப்படுவது குறிப்பாக சிக்குன்குனியா நோய்க்கான அறிகுறியாகும்.

எனினும் சிறுவர்களிடத்தே இவ்வாறான நோய் அறிகுறிகள் அவதானிக்கப்படுவதில்லை. எனவே, நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், சிறுவர்கள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டோர் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (நி)


# மரண அறிவித்தல்

மலர்வு 1950 - 06 - 27



உதிர்வு 2025 - 06 - 12

## திருமதி. வரராஜசிங்கம் பத்மாவதி

(ஓய்வுநிலை ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி, வவு/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரராஜசிங்கம் பத்மாவதி அவர்கள் 12.06.2025 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், மா.வரராஜசிங்கத்தின் பாசமிகு மனைவியும், கோகுலன், ஹரிராம்ஜனனி ஆகியோரின் பாசமிகு தாயாரும்

பா. சரோஜினிதேவி, க. பத்மநாதன், காலஞ்சென்றவர்களான க.சத்தியநாதன், வே.சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மா.தில்லையம்பலம், திருமதி சி.சுகன்யா, திருமதி கு. தேவரஞ்சா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.06.2025 இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புகையிரத நிலைய வீதி, தெல்லிப்பழை.

(4529)

தகவல், குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



ஆனந்தநடராசா தயாளன் தம்பதியினரால் மண்டைதீவில் நிர்மாணிக்கப்பட்ட அபிநல்லு சிறுவர் பூங்கா நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் சிறுவர் பூங்காவைத் திறந்து வைத்தார்.

பூங்காவில் அமைக்கப்பட்ட கவியரசு கண்ணதாசனின் உருவச் சிலைக்கு ஆனந்தநடராசா வசந்தரூபன் மலர்மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வில் மதத்தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## குஜராத் ...

இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டன் காட்விக் விமான நிலையத்திற்கு நேற்று மதியம் ஏர் இந்தியாவின் ஏஐ 171 போயிங் விமானம் புறப்பட்டது. புறப்பட்ட சில நிமிடங்களில் மேகானி நகர் குடியிருப்பு பகுதி அருகே கீழே விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானது.

விமானத்தில் 2 விமானிகள், 10 ஊழியர்கள் உட்பட 242 பேர் பயணம் செய்துள்ளனர். இதில் 169 பேர் இந்தியர்கள். 53 பேர் இங்கிலாந்தை சேர்ந்வர்கள். ஒருவர் கனடா நாட்டைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும் 12 வயதிற்கு உட்பட்ட 14 குழந்தைகள் விமானத்தில் பயணம் செய்துள்ளனர்.

விமான விபத்தில் சுமார் 240 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் எனச் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

விமான விபத்து நடைபெற்ற இடத்தில் நேற்று இரவு வரை 204 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

### மாணவர்கள் உயிரிழப்பு

அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான ஏர் இந்திய விமானத்தின் ஒரு பகுதி அந்நகரில் உள்ள பிஜே மருத்துவக் கல்லூரியின் உணவகப் பகுதியின் மேல் விழுந்ததில் குறைந்தது ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அகில இந்திய மருத்துவ சங்க கூட்டமைப்பின் துணைத் தலைவர் திவ்யான்ஷ் சிங் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், விபத்து நடந்த நேரத்தில் பல்கலைக்கழக உணவகத்தில் இருந்த சுமார் 50 பேர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

### குஜராத் முதல்வர் பலி

இந்தியாவின் - அகமதாபாத் விமான நிலையம் அருகே நடந்த விமான விபத்தில், குஜராத்தின் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் 2016 முதல் 2021 வரை மாநில முதல்வராகப் பணியாற்றியுள்ளார்.

குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி பிஸ்னஸ் கிளாஸ்-இல் பயணம் செய்த நிலையில் அவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

### உயிர் தப்பிய பயணி

இந்தக் கோர விபத்தில் இருந்து ஒரு பயணி மட்டும் உயிரோடு தப்பியுள்ளார்.

அதன்படி இருக்கை எண் 11ஏ இல் பயணம் செய்த விஸ்வாஷ் குமார் என்பவர் உயிர் தப்பியுள்ளதாக அகமதாபாத் பொலிஸ் ஆணையர் ஜி.எஸ்.மாலிக் தகவல் தெரிவித்துள்ளார்.

அவசரக் கதவு வழியாக அவர் விமானத்தில் இருந்து குதித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-4,7)

## கப்பல்...

படுத்துவதற்காக, இந்திய அரசு மேலும் ஒரு வருடத்திற்கு நிதி உதவியை நீடித்துள்ளது.

இது பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதற்கும் இலங்கையுடனான மக்களிடையேயான உறவுகளை வலுப்படுத்துவதற்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்று இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது. (ம-4,7)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 6, ஆள்காட்டி வளவு ஒழுங்கை, 33/1 pt ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வைத்திலிங்கம் அரியரட்ணம் என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

மேற்குறித்த ஆதனத்தினை வைத்திலிங்கம் கைம்பெண் தங்கம்மா 2001.12.27 ஆம் திகதியிட்டு 4400 ஆம் இலக்க அறுதியுறுதி மூலம் வைத்திலிங்கம் அரியரத்தினத்திற்கு அறுதியாக விற்றுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தினை அரியரட்ணம் யாழினி, அரியரட்ணம் லக்சினி ஆகியோர் 18797 ஆம் இலக்க 2022.03.19 ஆம் திகதிய பிரிவிடல் உறுதி மூலம் தமக்குள் பிரிவிட்டுக் கொண்டுள்ளனர். குறித்த உறுதியில் தமது தந்தையாரின் கொள்வனவும் ஆட்சியும் எனவும், தமது தாயார் ரஜனி என்பவர் 92 ஆம் ஆண்டிலிருந்து தமது தந்தையாரை நிரந்தரமாகவே பிரிந்து வாழ்ந்து வரும்போது தமது தந்தையாரால் அவரது பணத்தில் இவ்வாதனம் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், தமது தாயாருக்கு குறித்த ஆதனத்தில் தேடிய தேட்டப்பாகமோ கொள்வனவுப்பாகமோ சென்றடையமாட்டாது எனவும், இதன் காரணமாக தமது இருவரதும் பிதாவழி முதுசமும் ஆட்சியுமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த உறுதியில் ஆதன அட்டவணை இ.அரியரட்ணம் லக்சினிக்கு நிந்தமாக பிரித்துவிடப்படும் ஆதனம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று நல்லூர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் மாநகரசபை கிராம அலுவலர் பிரிவு அரியாலை மத்தி தெற்கு J/96 சிவியாதெரு இறை "ஆத்திக் காட்டுவளவு" நிலப்பரப்பு 1 குளி 6.75 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.தனராஜா அவர்களால் 28.02.2022ந் திகதி 1896A இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் 1ம் 2ம் துண்டுகளாகச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 5.92 இதில் கிழக்குப்பக்கமாக குறித்த படத்தில் 2ம் துண்டாகச் சுட்டப்பட்ட குளி 10.52 பத்து தசம் ஐந்து இரண்டு இதற்கு எல்லை

கிழக்கு : பஞ்சரட்ணம் பெண் நாகேஸ்வரியின் ஆதனம்
வடக்கு : பத்தடி அகலப்பாதை
மேற்கு : 1896A இலக்கப்படத்தில் 1ம் துண்டு அரியரட்ணம் யாழினியின் ஆதனம்
தெற்கு : அருமைரட்ணம் பெண் மகாலட்சுமியின் ஆதனம் இதடங்கலும்

இன்னும் இதன் வடக்கெல்லையில் உள்ள 10 அடி ஒழுங்கை யால் அதன் கிழக்கு எல்லையில் இருக்கும் ஆட்காட்டி ஒழுங்கைக்கு போக்கு வரத்துச் செய்யும் உரித்தும்

தற்போது அரியரட்ணம் லக்சினி மேற்குறிந்த ஆதன அட்டவணையில் குறிப்பிட்ட ஆதனத்தின் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அரியரட்ணம் லக்சினி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-3187)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 15 ஸ்ரான்லி வீதி, ஆதன இல 302, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கோவிந்தபிள்ளை மகள் குணவதி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு கல்லூரி வீதி விசுவநாதர் கைலாசபிள்ளையும் விசுவநாதர் அம்பலவாணரும் அவர்களும் 27.10.1974ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பாலசுப்பிரமணியம் முகதாவில் 88ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி இராமர்பிள்ளை கோவிந்தபிள்ளை மகள் குணவதிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி தற்போது இல 80 மேவூட் பார்க், எஸ்காபரோ ஒன்டாரியோ, எம்1கே2ஏச4 கனடாவில் வசிக்கும் மனுவேற்பிள்ளை ஜோசுவா நிர்மலன் தனது காலஞ்சென்ற தாயாரான இராமன்பிள்ளை கோவிந்தபிள்ளை மகள் குணவதி மறுநாமம் கிளமென்ற் மனுவேற்பிள்ளை பெண் குணவதிக்கு தானே ஒரு பிள்ளை என 10.02.2025ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சிவயோகம் சந்திரதேவி முகதாவில் 317ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரகடனப்படுத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை இல 302ஸ்ரான்லி வீதி வட்டாரம் 15 அத்தியடி யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் J/78 அந்தியடி கிராமசேவையாளர் பிரிவுக்குமுட்பட்ட "ஆழடிதரை அல்லது கிடவிழுந்தான் பள்ளம்" இது 1972.04.10 ஆம் திகதி நிலஅளவையாளர் N.தேவராஜன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 427Aம் இலக்க படத்தில் துண்டு 1, இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று குளி மூன்று தசம் இரண்டு சைபர் (நில.பர. 1 குளி 320) கடைக்கட்டிடங்கள், கிணறும் தெற்கு எல்லைச் சுவரில் வடக்கு பக்கமாக அரைவாசியும் இது மீள 2024.04.03 ஆம் திகதி நிலஅளவையாளர் S.R.சிவேந்திரகலாநிதி அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 621ம் இலக்க படத்தில் துண்டு 1 இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று குளி இரண்டு தசம் நாலு ஆறு (நில.பர. 1 குளி 2.46) ஆகும் கடைக்கட்டிடங்கள், கிணறும் தெற்கு எல்லைச்சுவரில் வடக்கு பக்கமாக அரைவாசியும் இதற்கு எல்லை

கிழக்கு - குறித்த 427A இலக்க படத்தில் துண்டு 2 தற்பொழுது கனகலிங்கம் பெண் மங்கயற்கரசியின் ஆதனமான இல 314, ஸ்ரான்லி வீதி
வடக்கு - ஸ்ரான்லி வீதி
மேற்கு - பருத்தித்துறை வீதி
தெற்கு - குறிந்த 427A இலக்க படத்தில் துண்டு 3 தற்பொழுது சாந்தலிங்கம் சாரங்கனின் ஆதனமான இல 118, பருத்தித்துறை வீதி இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை மனுவேற்பிள்ளை ஜோசுவா நிர்மலன் தமது பெயரிற்குளமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது மனுவேற்பிள்ளை ஜோசுவா நிர்மலன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்யநடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-3189)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொருட்களின் விலை உயரும் அபாயம்!

## தேசிய நுகர்வோர் முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் அண்மையில் அறிவிக்கப்பட்ட 15% மின்சார கட்டண உயர்வு, நாடளாவிய அளவில் உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு காரணமாகிவிடும் என தேசிய நுகர்வோர் முன்னணி தலைவர் அசேல சம்பத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மின்சாரம் பற்றிய அதிக செலவுகள், உணவுத் தயாரிப்பு மற்றும் விநியோகச் செலவுகளை நேரடியாக பாதிக்கும். இதன் விளைவாக, அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு ஏற்கனவே உயர்ந்துள்ள சூழலில், பல குடும்பங்கள் போஷாக்கு கூறுகளான உணவுகளை கொள்வனவு செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக, அண்மையில் அதிகரித்துவரும் தொற்றா நோயாளர்கள் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த வேண்டும், என அவர் குறிப்பிட்டுள்ளார். (8)



### நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய விசுவாவசு வருட மஹோற்சவம் (2025) எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் உற்சவங்கள் இடம் பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை இரவு திருமஞ்சத் திருவிழாவும், 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், 9 ஆம் திகதி புதன் கிழமை காலை தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை கங்காதரணி தீர்த்தக்கரையில் தீர்த்தோற்சவமும் அன்று இரவு கொடியிறக்கமும் இடம்பெற்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையவுள்ளதென ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முதலாம் இடம்பெற்ற மாணவன் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 186 புள்ளிகள் பெற்று தேசிய ரீதியில் முதல் நிலை பெற்ற யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் பரமேஸ்வரன் பிரசோதன் அவர்கள் எதிர்வரும் ஜூலை மாதம் ஜப்பானில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டுக்கான ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிலையில் அவரை ஊக்குவிக்கும் நிகழ்வு ஓய்வு பெற்ற வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

ஜப்பானில் நடைபெறும் குறித்த மாநாட்டில் இலங்கையில் இருந்து நான்கு மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காரைநகரைச் சேர்ந்த ஒரே ஒரு தமிழ் மாணவன் பிரசோதன் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)



# தேசிய விலங்கு கணக்கெடுப்பு அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட தேசிய விலங்கு கணக்கெடுப்பின் அறிக்கை விவசாய அமைச்சினால் நேற்று அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.

அதன்படி, நாடு முழுவதும் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் டோக் குரங்குகள்-5.17 மில்லியன், சாம்பல் நிறக் குரங்குகள்-1.74 மில்லியன், மர அணில்-2.66 மில்லியன் மற்றும் மயில்கள்-4.24 மில்லியன் என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (க-8)

# சிறைச்சாலைகள் திணைக்கள

## ஊடகப் பேச்சாளராக ஜகத் வீரசிங்க

(கொழும்பு)

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக ஜகத் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி மோசடி குற்றச்சாட்டின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அத்துல திலகரத்னவைக் கடந்த வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் எழுந்து வரும் சர்ச்சைகளை கருத்தில் கொண்டு சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய காமினி பி. திசாநாயக்க, சிறைச்சாலைகள் பதில் ஆணையாளரிடம் தனது இராஜினாமா கடிதத்தை நேற்று வியாழக்கிழமை சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக ஜகத் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# இராசிபலன்

13.06.2025
வைகாசி 30, வெள்ளிக்கிழமை
துதியை பிற்பகல் 3.15 மணிவரை

பூராடம் முன்னிரவு 11.29 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை

சந்திராஷ்டமம்- ரோகிணி, மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கடகம்**
வழிபாடு சிறப்பினைத் தரும், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்புக்கள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும்.

**துலாம்**
வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க உறவினர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்**
வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயனசுகக் குறைவுண்டு.

**ரிஷபம்**
உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைச்சுமை கூடும்.

**சிம்மம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்**
பணவரவால் சந்தோசமடைவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்**
பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**கன்னி**
பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு**
மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, போசன சுகமுண்டு.

**மீனம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

உன் உயர்வை உன்னை விட உயர்ந்தவனை வைத்துப் பார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்தியாவிலிருந்து யாழ் திரும்பியவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சமூக மான மீள் ஒருங்கிணைப்பிற் கான உதவித் தொகை யானது யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபனால் நேற்று முன்தினம் புதன் கிழமை மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் மேலதிக செயலர் (காணி) க.ஸ்ரீமோக னன், இலங்கை ஈழ அகதிகள் மறுவாழ்வுக்கான அமைப் பின் இணைப்பாளர் இ. பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர் நிறுவனத்தால் ஈழ அகதிகள் மறுவாழ்வுக்கான நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு - அந் நிறுவனத்தால் இதற்கான உத வித்தொகை தலா 90 ஆயிரம் ரூபாய் வீதம் வேலணை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் மீளத் திரும் பிய ஆறு பேருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (நி-3-33)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமும்- வேலணைப் பிரதேச செயலகமும் இணைந்து பொருளாதார ரீதியாக நலி வடைந்த குடும்பத் தலைவிகளுக்கான தொழிற்பயிற்சிப் பட்டறை ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். இதன்போது பொம்மைகள் தயாரிப்பது தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (படம்:- சுபேசன்)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூ தியர்களின் நம்பிக்கை நிதி யத்தின் யாழ்ப்பாண மாவட்டம் ஜெ/18 இன் 16 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் நாளை சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாவ ட்ட செயலக மாநாட்டு மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம் பிக்கை நிதியத்தின் தலைவர் அ.அருந்தவநேசன் தலை மையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தின ராக யாழ்.மாவட்ட செயலக பதில் அரச அதிபர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் தாய்ச் சங்க பொரு ளாளர் சோ. சுப்பிரமணியம், யாழ். மாவட்ட செயலக கணக் காளர் செ. கிருபாகரன் மற்றும் யாழ். மாவட்ட நிர்வாக அலு வலர் ஆ.சத்தியமூர்த்தி ஆகி யோரும் கௌரவ விருந்தின ராக யாழ். மாவட்ட செயலக ஓய்வூதிய அலுவலர் ஜெ.பிரதீ பன் கலந்து கொள்ளவுள்ள தாக யாழ். மாவட்ட நிர்வாகக் குழுவினர் தெரிவித்துள்ள னர். (நி-3-8)



நயினாதீவு அருள்மிகு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய உயர்திருவிழாவின் கொடிச்சீலை, உற்சவ குருமணியிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றது. (படம்:- சிவசாந்தன்)

## பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யா/ ஆவரங்கால் மகா ஜன வித்தியாலய பரிசளிப்பு விழாவும் "மகாஜனனம்" நூல் வெளியீடும் எதிர் வரும் 16 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை முத்துலிங்கம் மண்டபத்தில் பாடசாலை முதல்வர் ப.கமலதாசன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்./ கிளி நொச்சி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் ஜெ.றஜீ வன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலா சாலை முதல்வர் ச. லலீசன், கௌரவ விருந்தினர்களாக திருமதி கீர்த்தனா ராகுலன் மற்றும் வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் து.சுரேஸ் குமார் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ள னர். (3)

## வாகன இலக்கத்தகடுகள் தொடர்பாக...

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலிருந்து 2025. 05.30 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டி யல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங் களிலும் மாவட்ட செயலகத்தில் உள்ள மாவட்ட மோட்டார் போக்கு வரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள் ளது.

httpd://dmtappoint ments. dmt.gov.lk என்ற இணையத் தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 2117 116 என்ற தன் னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து அதற்காக தங்கள் கைத்தொலை பேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன், புதிதாக வாகனங் களைப் பதிவு செய்த உரிமை யாளர்கள் வாகனப்பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என் பவற்றையும், மாகாணங்களுக் கிடையே இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கங்கள் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றை யும் யாழ். மாவட்ட மோட்டார் போக்கு வரத்து அலுவலகத்தில் குறிப்பிட்ட திகதியில் குறித்த நேரத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடு களைப் பெற்றுக் கொள்ளலாம் என உதவி ஆணையாளர் அறிவித்துள் ளார். (நி-8)

## வீட்டுக்கழிவுகள் தொடர்பாக
### யாழ். மாநகர சபையின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையி னுள் வசிக்கும் பொதுமக்கள் தரம் பிரிக்கப்பட்ட வீட்டுக் கழிவுகளை தினமும் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை பிரட்டு அலுவலகங்களில் சமர்ப்பிக்க முடியும் என மாநகர சபை அறிவித் துள்ளது.

யாழ் மாநகரசபையின் திண்மக் கழிவகற்றல் செயற்பாடானது 27 வட்டாரங்களை உள்ளடக்கி 9 பிரட்டு அலுவலகங்களை மையப் படுத்தி அமைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு பொதுமக்கள் தரம் பிரிக் கப்பட்ட வீட்டுக்கழிவுகளினை கைய ளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள் ளது.

அந்த வகையில் பொதுமக்கள் தரம் பிரிக்கப்பட்ட வீட்டுக்கழிவுகளை தட்டாதெருச்சந்தி - வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம், சங்கிலி யன் வீதி - நல்லூர், நாவலர் மாம்பழச்சந்தி - அரியாலை, நாவந் துறைச் சந்தை - நாவாந்துறை, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம், பிரதான வீதி தண்ணீர் தாங்கி யடி - குருநகர் I, கொழும்புத் துறை , கடற்கரை வீதி ஆரம்பச் சுகாதார பணிமனை அருகாமை - பாசையூர், குருநகர் தண்ணீர் தாங்கியடி - குருநகர் II ஆகிய முகவரிகளில் கையளிக்க முடி யும். (3)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 350 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 160 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 650 | 650 |
| தக்காளி | 600 | 650 | 500 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 250 | 280 |
| கோவா | 450 | 550 | 550 | 350 |
| கரட் | 800 | 850 | 800 | 700 |
| பூசணி | 100 | 150 | 150 | 130 |
| புடோல் | 150 | 150 | 200 | 150 |
| வாழைக்காய் | 120 | 120 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 380 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 600 | 500 | 800 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 250 |
| பயற்றங்காய் | 300 | 300 | 200 | 300 |
| லீக்ஸ் | 350 | 450 | 450 | 350 |
| பீற்றூட் | 600 | 500 | 550 | 350 |
| கறிமிளகாய் | 500 | 800 | 500 | 550 |
| முருங்கைக்காய் | 1400 | 1600 | 1200 | 1250 |
| போஞ்சி | 400 | 650 | 600 | 480 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 40-100 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 150 | 100-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 550 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 600 | 700 |
| முள்ளங்கி | 250 | 200 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | - | -- | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலந்தவுக்கு எதிரான விசாரணை ஒக்டோபரில்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஏற்கனவே அறிந்திருந்தும் அதனை தடுக்கத் தவறியமை தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சமூக மற்றும் சமாதான நிலையத்தின் பணிப்பாளர் ரொஹான் சில்வா மற்றும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான சுராஜ் நிலங்க ஆகியோரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிமன்றத்தினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (க-8)

# 2009 இற்கு முற்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் ரத்து

## அரசாங்கம் பரிசீலனை

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டுக்கு முன்பு வழங்கப்பட்டு, புதுப்பிக்கப்படாத அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களையும் ரத்து செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இது தொடர்பான பரிந்துரை மற்றும் கோரிக்கைகள் பொலிஸ் திணைக்களம் ஊடாகப் பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகமே இதற்கு முழுப் பொறுப்பாவதால், இது தொடர்பாக விரைவில் அந்தத் திணைக்களம் ஒரு தீர்மானத்தை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் தற்போது ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளதுடன், அதில் 4 மில்லியனுக்கும் அதிகமானோர் 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு பெற்ற சாரதி அனுமதிப்பத்திரங்களை வைத்துள்ளனர். இவற்றில், இரண்டு மில்லியனுக்கும் அதிகமானோர் கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரங்கள் வைத்துள்ளதால் அவற்றைப் புதுப்பிக்க வேண்டியது கட்டாயம் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு பெறப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களை ரத்து செய்யும் புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (நி-8)

# புதியவகை டைனோசரை கண்டுபிடித்த விஞ்ஞானிகள்

(கொழும்பு)

மொங்கோலிய அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் புதிய டைனோசர் இனத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த புதிய வகை டைனோசர்களின் கண்டுபிடிப்பு அவற்றின் பரிணாம வளர்ச்சியின் வரலாற்றைப் புதுப்பிப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தாங்கள் ஆய்வு செய்த, 86 மில்லியன் ஆண்டுகள் பழமையான இரண்டு எலும்புக் கூடுகள், அனைத்து டைனோசர்களின் நெருங்கிய மூதாதையராக கருதப்படும் டி.ரெக்ஸை உள்ளடக்கிய குழுவைச் சேர்ந்தவை என்றும் இவை 750 கிலோ எடையுள்ளவை என்றும் தெரிவித்துள்ளனர். (க-8)


## மரண அறிவித்தல்

### திரு.சுப்பிரமணியம் கதிர்காமராஜா

**(Retired Medical Laboratory Technician)**

**தோற்றம் : 28.01.1941** **மறைவு: 09.06.2025**

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மெல்பேர்ண் அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் கதிர்காமராஜா (யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவன்) அவர்கள் **09.06.2025** திங்கட் கிழமை அன்று மெல்பேர்ணில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக்கணவரும், விஜயராஜன் (ராஜன் - மெல்பேர்ண்), கலைச்செல்வி (ராஜி - ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காயத்திரி, ஜெய்சங்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற புஸ்பராணி (நியூசிலாந்து), இந்திராணி (இலங்கை), காலஞ்சென்ற விமலராணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவநேசன் (இலங்கை), சுந்தரலிங்கம் (கனடா), தில்லைநாதன் (கனடா), யோகேஸ்வரன் (சுவிஸ்லாந்து), ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிரூஜன், அனுஜன், சௌமியா, சரணியா, சகானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்: **15.06.2025** ஞாயிற்றுக் கிழமை காலை **10.00** மணிக்கு **Stratus Chappel, Bunurong Memorial Park, 790 Frankston-Dandenong Road, Dandenong South** இல் நடைப்பெறும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.**

**தொடர்புகளிற்கு:**
**விஜயராஜன் (ராஜன் – மெல்பேர்ண்) +61 419243233**
**கலைச்செல்வி (ராஜி – ஜேர்மனி) +49 152 26708105**



# INVITATION FOR BIDS

## PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:021 229 1023, email: pkips @ gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 13.06.2025 until 25.06.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 20.06.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 26.06.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security | |
| | | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| 01 | PSDG/NP/MU/PTKPS/RD/2025/LAR/06 | Construction of Aathiparasakthi Road (250m tar), Kompavil, Puthukkudiyiruppu Division | PSDG Fund | 3.81 | 77 | C9 or Above (Highway) | 2,000.00 | 13-August-2025 | 60,000.00 | 11-Sep-2025 |

6. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu on or before 10.30 A.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**
7. Pre-Bid Conference will be held at Conference Hall, **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu commencing at 10.30 AM as stated in table above.**
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha,**
**Paranthan Road,**
**Puthukkudiyiruppu.**
**13.06.2025**

(C-3185)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சமூக வலைத்தளங்களை சிறுவர்கள் பயன்படுத்தத் தடை

### பிரான்ஸ் அரசு அதிரடி




(பாரிஸ்)

சமூக வலைத்தளங்கள் இளைஞர்கள் மீது ஏற்படுத்தும் எதிர்மறைத் தாக்கம் குறித்து கவலைகள் அதிகரித்துள்ள நிலையில் பிரான்ஸ் முக்கிய முடிவை எடுத்துள்ளது.

15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்க விரைவில் கடுமையான விதிகள் அமுல்படுத்தப்படும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானு வேல் மெக்ரோன் அறிவித்துள்ளார்.

மெக்ரோன் கூறுகையில், "15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கூட்டு முடிவு எடுக்குமா என்பதைப் பார்க்க சில மாதங்கள் காத்திருப்போம்.

எந்தப் பதிலும் வரவில்லை என்றால், பிரெஞ்சு அரசாங்கமே இந்தத் தடையை அமுல்படுத்தும்" எனத் தெரிவித்தார்.

இளைஞர்களிடையே வன்முறைப் போக்குகள் அதிகரித்து வருவதற்கும், குழந்தைகள் மேற்பார்வையின்றி டிஜிற்றல் தளங்களை அணுகுவதற்கும் சமூக ஊடகங்களே முக்கிய காரணம் என்று மெக்ரோன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு, அவுஸ்திரேலியா 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஈரானுடனான பதற்ற...

## ஊழியர்களை வெளியே...

அவர்கள் வெளியேற்றப்படுவதற்கு என்ன காரணம் என்பதை அதிகாரிகள் உறுதியாகக் கூறவில்லை.

எனினும், அண்மைய நாட்களில் ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்துள்ளதாகத் தெரிகிறது.

அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே பல வாரங்களாக நடந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டெஹ்ரான் அணு ஆயுதத்தை உருவாக்குவதைத் தடுக்க ஒரு ஒப்பந்தத்தை எட்ட ஜனாதிபதி ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதம் வைத்திருக்க அமெரிக்கா அனுமதிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

அணுசக்திப் பேச்சுவார்த்தைகள் ஒரு முக்கியமான கட்டத்தில் இருப்பதால், அமெரிக்காவின் அறிவிப்பு உண்மையான கவலைக்கு மாறாக எந்த அளவுக்கு சமிக்ஞை செய்வது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

ஆனால், பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால், இஸ்லாமிய குடியரசுக்கு எதிராக இராணுவத் தாக்குதல்களுக்கு ட்ரம்ப் உத்தரவிட்டால், தனது நாடு பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கத் தளங்களுக்கு எதிராக பதிலடி



## வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்ட பாடசாலைப் பேருந்து

### மாணவர்கள் உட்பட 49 பேர் உயிரிழப்பு



(கேப்டவுண்)

தென்னாபிரிக்காவில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து வெள்ளத்தில் சிக்கி சுமார் 49 பேர் உயிரிழந்ததாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் சில பகுதிகளில் கடுமையான குளிர் நிலவுவதால் மழை மற்றும் பனி ஏற்பட்டு வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

மிகவும் பாதிக்கப்பட்ட மாகாணங்களில் ஒன்றான கிழக்கு கேப்பில், வெள்ளம் பலரை தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றியுள்ளது. இதனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மற்றும் வெள்ளம் மேவிப் பாய்வதால் வீதிகள் மூடப்பட்டுள்ளதாக மாகாண அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை முன்னதாக, அரச ஒளிபரப்பான SABC, செவ்வாய்க்கிழமை காலை பள்ளிக்குச் செல்லும் வழியில் டெகோலிக்னி கிராமத்தில் ஒரு பள்ளிப் பேருந்து ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...றங்கள் அதிகரிப்பு ...யேற்றும் அமெரிக்கா!

**(வோஷிங்டன்)**

**பாக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரக ஊழியர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்குப் பாதுகாப்பு அபாயங்கள் அதிகரித்து வருவதால் அவர்கள் ஈராக்கிலிருந்து வெளியேற்றப் படவுள்ளதாக அமெரிக்க அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

கொடுக்கும் என்று ஈரானியப் பாதுகாப்பு அமைச்சர் அஜீஸ் நசிர் சாதே தெரிவித்தார்.

இந்த நிலையில், குவைத் மற்றும் பஹ்ரைன் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அமெரிக்க இராணுவ வீரர்களின் குடும்பத்தினர் தாமாக முன்வந்து வெளியேறுவதற்கு அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத் ஒப்புதல் அளித்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் ஈரான் தனது யுரேனியம் செறிவூட்டல் திட்டம் பொதுமக்களின் எரிசக்தி உற்பத்திக்கானது என்றும் அது அணுகுண்டை உருவாக்க முயற்சிக்கவில்லை என்றும் கூறுகிறது.


இதனிடையே, நேற்று முன்தினம் புதன்கிழமை, ரோயல் கடற்படையின் ஒரு பகுதியான இங்கிலாந்தின் கடல்சார் வர்த்தக செயற்பாட்டு அமைப்பு, மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் இராணுவப் பதற்றங்கள் கப்பல் போக்குவரத்தை பாதிக்கக்கூடும் என்று ஒரு எச்சரிக்கையை வெளியிட்டது.

இது இவ்வாறிருக்க அமெரிக்கா வெளியேற்றம் குறித்த செய்தி வெளியானபோது, பிராந்தியப் பாதுகாப்பின்மை விநியோக சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்ற எதிர்பார்ப்பில், எண்ணெய் விலை ஆரம்பத்தில் 4%இற்கும் அதிகமாக அதிகரித்தது.

பாதுகாப்புத் துறையின் கூற்றுப்படி, சுமார் 2,500 அமெரிக்கப் படையினர் ஈராக்கில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

---

செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தென்னாபிரிக்கா சமீபத்திய ஆண்டுகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களில் சிலர் உயிரிழப்புகளை சந்தித்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் டர்பன் மற்றும் குவாசுலு-நாட்டாவில் 400 பேர் வரை இறந்தனர். (நி-8)

---

## ஹங்கேரியில் அரசுக்கு எதிராக திரண்ட மக்கள்




(புடாபெஸ்ட்)

ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்ட் நகரில் பிரதமர் விக்டோர் ஓர்பானின் அரசாங்கத்துக்கு எதிராக சுமார் 15,000 இற்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு நேற்று முன்தினம் மாபெரும் போராட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.


நாட்டில் இடம்பெற்று வரும் ஊழல் செயற்பாடுகள் மற்றும் LGBTQ+ சமூகத்தினருக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், அரசாங்கம் தமது ஜனநாயக உரிமைகளை மீறுவதாகவும் கோஷம் எழுப்பியிருந்தனர்.

இப்போராட்டத்தில் ஏராளமான சமூக ஆர்வலர்கள், நடிகர்கள், எழுத்தாளர்கள், இசைக்கலைஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

---

## லொஸ் ஏஞ்சல்ஸ் போராட்டம் இதுவரை 400 பேர் கைது



(வோஷிங்டன்)

லொஸ் ஏஞ்சல்ஸை உலுக்கிய குடியேற்ற எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதனால் நகரம் முழுவதும் அமைதியின்மை நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்டின், டெக்சாஸ், சிகாகோ, நியூயார்க், டல்லாஸ் மற்றும் டென்வர் உள்ளிட்ட பல அமெரிக்க நகரங்களுக்கும் ஆர்ப்பாட்டங்கள் பரவியதால், நேற்று முன்தினம் புதன்கிழமை காலை லொஸ் ஏஞ்சல்ஸில் நீக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு மீண்டும் அமுல்படுத்தப்பட்டது. வார இறுதியில் மேலும் போராட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இதில் பல குழுக்கள் ஈடுபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை 400 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 330 ஆவணமற்ற குடியேறிகளும் அடங்குவர்.

போராட்டங்களை அடக்குவதற்காக ட்ரம்பின் நிர்வாகத்தால் 700 கடற்படையினர் உட்பட ஆயிரக்கணக்கான படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், பொலிஸார் அவர்களைக் கைது செய்யும் வரை மக்களைத் தடுத்து வைக்கும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாகப் பரவும் எலிக்காய்ச்சல்

(கொழும்பு)

**நாடு முழுவதும் எலிக்காய்ச்சல் பரவல் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

இரத்தினபுரி, குருநாகல், கேகாலை, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்தே அதிக எலிக் காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளதாக சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் துஷானி தபரேரா குறிப்பிட்டார்.



சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (நி-8)

# சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் இராஜினாமா

(கொழும்பு)

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளராகப் பணியாற்றிய சிறைச்சாலைகள் கண்காணிப்பாளர் காமினி பி. திசாநாயக்க, தனது இராஜினாமா கடிதத்தை சிறைச்சாலைகள் பதில் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை துஷ்பிரயோகம் செய்து அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து ஒரு கைதி விடுவிக்கப்பட்டமை தொடர்பான தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு ஊடகப் பேச்சாளர் தனது இராஜினாமாவை சமர்ப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்க மணமகள் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி-பா-17
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MSc, Engineer
எதிர்பார்ப்பு: தகுதியானபெண (Australia)
தொ.இ: B/15622

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
உயரம்:5'5"
தகைமைஃதொழில்-A/L.Business
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/15623

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:பூராடம்
8இல் சூரி செவ்
கி-பா-57
உயரம்:6'2"
தகைமை/தொழில்:BSc,QS
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15625

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி-பா-43
உயரம்:5'
தகைமை/தொழில்-QS(PVT)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15626

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி-பா- 52
7இல் செவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: BBA,Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15629

### இவர்களுக்க மணமகன் தேவை

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்: சதயம்
7இல்செவ்
கி-பா-18
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc,Project Manager
எதிர்பார்ப்பு: Doctor , Engineer, பட்டதாரி
தொ.இ: G/15648

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்-திருவோணம்
கி-பா-12
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc, HRM(PVT)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15652

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-கேட்டை
கி.பா -55
உயரம்-5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15654

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:சுவாதி
2ல்செவ்
கி.பா-21
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -MBBS(Final year)
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/15655

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
8ல் சூரிசெவ்
கி.பா-64
உயரம்: 5'8"
தகைமை/தொழில் - A/L
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்.
தொ.இ: G/15657

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 393

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## கல்வியில் கவனம்

படிக்கும் பிள்ளைங்களுக்கு, படிப்பைத்தவிர வேறு எங்கேயும் கவனம் போகக்கூடாது! அப்போதுதான் படிப்பு நல்லா வரும்! இல்லை என்றால் வேறு ஏதாவது தான் வரும். குருகுலத்திலேயெல்லாம் ஒவ்வொருத்தரும் எப்படி எல்லாம் படித்திருக்கிறார்கள் தெரியுமா? யாக்ஞவல்கியரின் குருகுலத்திலே ஜனகர் படித்தார், ஜனகர் யார்? நாட்டுக்குராஜா. அதுதான் ராஜாவாக ஆகிட்டோமே! இனிமேல் நமக்கு எதற்குப் படிப்பு?என்று நினைக்கவில்லை அவர். கல்விக்கு எல்லை ஏது? யாக்ஞவல்கியர் தினமும் ஜனகர் வந்து சேர்ந்த பிறகு தான் பாடங்களை ஆரம்பிப்பது வழக்கம்.

இது சில மாணவர்களுக்குப் பிடிக்கவில்லை என்ன இது..?

ஜனகர், ஒரு மன்னன் என்பதாலேதானே இவர் அவருக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கிறார். என்று மனதுக்குள்ளே நினைத்தார்கள். இவர்கள் மனதிற்குள்ளே நினைப்பது குருவுக்குத் தெரியும் ஏன்னென்றால் அவருக்கு யோக சக்தி உண்டு, குரு கவலைப்பட்டார். தன்னைப்பற்றி இப்படி நினைக்கிறார்களே என்பதற்காக இல்லை. அவர்களுடைய கல்வியின் பலனை இப்படிப்பட்ட நினைப்புகள் மூலமாக இழந்து விடுவார்களே என்ற கவலை தான் அவருக்கு.ஒரு நாள் வகுப்பு நடந்துகொண்டிருந்தது. அவசர அவசரமாக சிலபேர் ஓடி வந்தார்கள்.

"ஐயா! பட்டணம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது! "என்றார். இதைக் கேட்டவுடனே துள்ளி எழுந்திரித்தார்கள் சில மாணவர்கள். குருவிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் வெளியே ஓடினார்கள். அங்கே கொடியிலே துவைத்துக் காயப் போட்டிருந்த அவங்களுடைய துணிமணிகளை எடுத்து பத்திரப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். இவங்களைப் பார்த்துவிட்டு இன்னும் சிலபேரும் எழுந்திரித்து ஓடினார்கள். அடுத்தபடியாக இன்னும் சிலபேர் சத்தம் போட்டுக் கொண்டே ஓடிவந்தார்கள்.

"அரசே! அரண்மனையிலேயும் நெருப்பு சூழ்ந்துவிட்டது அங்கே உள்ளவர்கள் எல்லாம் தெருவிலே இறங்கி ஓடிக் கொண்டிருந்தார்கள். சிலபேர் நெருப்புலே கூட மாட்டிக் கொண்டார்கள்" .

எல்லோரும் பதறினார்கள். ஆனால் ஜனகர் மட்டும் கொஞ்சம்கூட சலனமடையாமல் குரு சொல்லிக் கொடுக்கிற பாடத்திலேயே மூழ்கியிருந்தார். முனிவரே ஜனகரைப் பார்த்து..

"உன்னுடைய அரண்மனையிலேயும் தீப்பிடித்த தாமே!" என்றார். அந்த வார்த்தைகள்கூட ஜனகர் காதிலே ஏற வில்லையாம். அந்த அளவுக்குப் பாடத்தோடு அவர் ஒன்றிப் போய் இருந்திருக்கிறார். இது ஒரு உதாரணம், இன்னொரு உதாரணம் சொல்கிறேன்.

ஒரு குருகுலத்திலே ஒரு மாணவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆசிரியருடைய மனைவி அவனுக்கு சோறு பரிமாறிக் கொண்டிருந்தார். சோறு வைத்தார், காய்கறி எல்லாம் வைத்தார்.

அடுத்தபடியாக நெய் ஊத்துகிறேன் என்று சொல்லி ஊற்றினார் சாப்பிட ஆரம்பித்த மாணவன் முகம் ஒருமாதிரியாக ஆனது. "என்னங்க இது நெய் ஊத்துகிறேன் என்று சொல்லிவிட்டு வேப்ப எண்ணெய்யை ஊத்துகிறீங்களே ஏதாவது ஞாபக மறதி ஆகிவிட்டதா?" என்று கேட்டான். அதுக்கு ஆசிரியர் விவரம் சொன்னார்.

"அப்படி இல்லையப்பா! நீ என்றைக்கு வந்து சேர்ந்தியோ அன்றையிலேயிருந்து உனக்கு வேப்ப எண்ணெய் தான் ஊற்றிக்கொண்டு வருகிறோம். உன்னுடைய கவனம் படிப்பிலே இருந்ததினாலே உன்னுடைய நாக்கு ருசி தேடவில்லை ஆனால், இன்றைக்கு உன்னுடைய கவனம் மாறி விட்டது. அதனாலே தான் இது வேப்பெண்ணை என்கிற ஞாபகம் உனக்கு வந்து விட்டது. உன்னுடைய நாக்கு ருசி தேட ஆரம்பித்து விட்டது. இனிமேல் நீ இந்த குருகுலத்திலே இருக்க வேண்டாம். இதைவிட்டுட்டுப் போய் விடுவதுதான் நல்லது" என்றார்.

கல்வி என்றால் அதிலே எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதற்கு இதெல்லாம் உதாரணங்கள், நீங்கள் உடனே என்ன சார். இது நெருப்புப் பிடித்தால் கூட அதை கவனிக்காமல் விட்டு விடவேண்டுமா? வேப்பெண்ணெய்யை நெய் என்று ஊத்தினால் கூட சாப்பிட்டுக் கொண்டிருக்கனுமா?" என்று கேட்கக் கூடாது. கல்வியிலே கவனம் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்வதற்கு இதெல்லாம் உதாரணம் என்று எடுக்க வேண்டும் அவ்வளவுதான். இந்தக் காலத்துப் பையன் ஒருவனிடம் பேசிக் கொண்டிருந்தேன். இந்த கதைகளையெல்லாம் அவனிடமும் சொல்லிவிட்டு, கேட்டேன்.

"ஏம்பா... நீ வீட்டிலே உட்கார்ந்து படித்துக் கொண்டு இருக்கும் போது ஒருவன் ஓடிவந்து உங்கள் பள்ளிக்கூடம் தீப் பிடித்துவிட்டது என்று சொல்கிறான். நீ உடனே என்ன செய்வாய்?" என்று கேட்டேன்.

"நானும் ஜனகர் மாதிரிதான் சார் படித்துக் கொண்டுதான் இருப் பேன். எழுந்து ஓடி தீயை அணைப்பதற்கு முயற்சி செய்ய மாட்டேன் என்றான். "ஏண்டா அப்படி?" என்றேன். "பள்ளிக்கூடம் எரிந்தால் தானே சார் மாணவர்களுக்கு எல்லாம் லீவு கிடைக்கும்!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற பொது மன்னிப்பு

# இருவர் உள்ளே! வெளியே!

## ஏன் இந்தப் பாரபட்சம்?

**(கொழும்பு) ................................ ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை பயன்படுத்தி முறையற்ற வகையில் கைதியொருவருக்கு விடுதலை வழங்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் கைது செய்யப்பட்டுள்ளதை போன்று ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் நீதி அமைச்சின் செயலாளர் ஆகியோரும் கைது செய்யப்பட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்படாத கைதியொருவரை விடுதலை செய்த சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் சிறைச்சாலையின் அதிகாரியொருவரும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யார் தவறு செய்துள்ளார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு செயற்பாடு தொடர்பில் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். பொதுமன்னிப்புக்கு உட்பட வேண்டிய கைதிகளின் பெயர் பட்டியலை அனுப்புமாறு ஜனாதிபதியின் செயலாளரினால் நீதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தை அமைச்சின் செயலாளர் சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு அனுப்பியுள்ளார். அதன்பின்னர் அதனைசிறைச் சாலைகள் ஆணையாளர் சகல சிறைச்சாலைகளுக்கும் அனுப்பியுள்ளார். அதன்படி பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டிய கைதிகள் தொடர்பான விபரங்கள் ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த பட்டியல் மீண்டும் ஜனாதிபதியின்செயலாளர் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாக சகல சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். அப்படியாயின் சிறைக் கைதியொருவரின் பெயரை அந்த பட்டியலுக்குள் இரகசியமாக உள்ளடக்குவதென்றால் நான்கு பேர் அதில் சம்பந்தப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் செயலாளர், நீதி அமைச்சின் செயலாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் மற்றும் சிறைச்சாலை பணிப்பாளர் ஆகியோரே அந்த நால்வராகும். இதில் சிறைச்சாலைகள் பணிப்பாளர் குறிப்பிட்ட பெயரை உள்ளடக்கியிருந்தால் அவரை கைது செய்யலாம். ஆனால் சிறைச்சாலைகள் ஆணையாளரும் இதில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் இதில் தொடர்புபட்டிருந்தால், அவருக்கும் மேலுள்ள ஜனாதிபதி செயலாளர் மற்றும் நீதி அமைச்சின் செயலாளர் ஆகியோரும் பொறுப்பு கூற வேண்டும். இதன்படி ஜனாதிபதி செயலாளர் மற்றும் நீதி அமைச்சின் செயலாளர் ஆகியோரும் கைது செய்யப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (க-8)

# புகைத்தல், போதையை ஒழித்தல் விழிப்புணர்வுப் பேரணி!



(தருமபுரம்)

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு விழிப்புணர்வுப் பேரணி நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வுப் பேரணி காலை 9 மணியளவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திலிருந்து பளை பொதுச் சந்தை வரை நடத் தப்பட்டது.

இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பளை மத்திய கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய மட்ட அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் போதைப்பொருளுக்கு எதிரான கருத்துரையை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆற்றியதுடன் போதைப் பொருள், புகைத்தலுக்கு எதிராக மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. (8-316)




கிளிநொச்சி தெற்கு வலயத்திற்குட்பட்ட திருவள்ளுவர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு முதலாவது படைப் பிரிவினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்: தேவானந்தன்)

# 30 ஆயிரம் மெட்ரிக்தொன் உப்பு இறக்குமதி செய்யத்திட்டம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் உப்புத் தட்டுப்பாடு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு 30 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பினை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கடந்த மே மாதம் 22ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 7ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 18 ஆயிரத்து 163 மெட்ரிக் தொன் உப்பு நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. இதன் மொத்த மதிப்பு 1,291 மில்லியன் ரூபா எனவும், உப்பு இறக்குமதிக்காக 571 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-8)

# நிலக்கடலை விதைப்பு

(வவுனியா)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் பிடியளவு கமநிலம் செயற்றிட்டத் தின் ஊடாக நொச்சிமோட்டை கிராமத்தில் வதியும் ஒருவருடைய காணியினைப் பயன்பாட்டுக்கு கொண்டு வந்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.விமலரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சரத்சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) நா.கமலதாசன் மற்றும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பிடியளவு கமநிலம் செயற்றிட்டம் மூலமாக உள்வாங்கப்பட்ட காணியில் நிலக்கடலை (கச்சான்) விதைக்கும் செயற்பாட்டினைப் பிரதம விருந்தினர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-250)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 797





சில நிமிடத்த்தில் எல்லாம் அந்தக் குதிரைகளும் வந்து நின்றன. அந்தக் குதிரைகளின் மீது வந்தவர்கள் கடம்பூர் ஆட்கள் என்பதைக் கந்தமாறன் கவனித்தான். அவர்களிடம் நெருங்கிச் சென்று விபரம் கேட்டான்.

பின்னர், இளவரசன் ஆதித்த கரிகாலனிடம் வந்தான். "கோமகனே! இந்த வந்தியத்தேவன் தங்களுக்கும் நண்பன் எனக்கும் சிநேகிதனாகத்தான் இருந்தான். ஆனால் இவன் மீது குற்றம் சுமத்த வேண்டியதாயிருக்கிறது. இவன் சிநேகிதத் துரோகி! இவன் என்னை முதுகில் குத்திப் படுகாயப் படுத்தினான். ஆகையால் இவன் விடயத்தில் தாங்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்று எச்சரிப்பது என் கடமையாகிறது!" என்றான் கந்தமாறன்.

### 12 ஆம் அத்தியாயம்
### வேல் முறிந்தது!

கந்தமாறன் அவனுடைய அருமை நண்பனாயிருந்த வந்தியத்தேவன் மீது கூறிய குற்றச்சாட்டைக் கேட்டு ஆதித்த கரிகாலன் இடி இடி என்று உடல் குலுங்கச் சிரித்தான்.

"கந்தமாறா! வந்தியத்தேவன் உன் முதுகில் குத்திவிட்டான் என்றா சொல்லுகிறாய்? நீ என்னத்திற்காக அவனுக்கு முதுகு காட்டினாய்?" என்று கேட்டுவிட்டு மறுபடியும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கத் தொடங்கினான்.

கந்தமாறனுடைய கரிய முகம் சிவந்தது. கண்கள் கோவைப் பழம் போலாயின உதடுகள் துடித்தன.

"ஐயா! தாங்கள் இதைச் சிரிக்கக் கூடிய விடயமாகக் கருதுகிறீர்களா?" என்று கேட்டான்.

"கந்தமாறா! நான் சிரிக்கக் கூடாது என்று சொல்கிறாயா? சிரிப்பு என்பது மனிதர்களுக்குத் தெய்வம் கொடுத்திருக்கும் ஒரு வரப்பிரசாதம். மாடு சிரிக்காது, ஆடு சிரிக்காது, குதிரை சிரிக்காது, சிங்கம் சிரிக்காது, வேடிக்கை விளையாட்டுகளில் மிக்க பிரியம் உள்ள குரங்குகள் கூடச் சிரிப்பதில்லை. மனித ஜென்மம் எடுத்தவர்கள் மட்டும் தான் சிரிக்க முடியும். அப்படி இருக்க, நீ என்னைச் சிரிக்கக் கூடாது என்கிறாயே? நான் கூடச் சிரித்து ரொம்பக் காலமாயிற்று. நண்பா! இப்போது நான் சிரிக்கும் சத்தத்தைக் கேட்டு, எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. நீ என்னைப் பார்த்துச் சிரிக்கக் கூடாது என்கிறாயே?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"ஐயா! தாங்கள் சிரித்து மகிழ்வது பற்றி எனக்கும் சந்தோஷந்தான். ஆனால் நான் இந்தச் சூராதி சூரனுக்கு முதுகு காட்டியதாக எண்ணிக் கொண்டு சிரிக்க வேண்டாம். நான் எதிர்பாராத சமயத்தில், பின்னால் மறைந்திருந்து இவன் என்னைக் குத்தினான். துர்க்கா தேவியின் அருளாலும், நந்தினி தேவியின் அன்பான சிகிச்சையினாலுமே நான் பிழைத்து எழுந்து வந்தேன். இவன் செய்த அந்தத் துரோகச் செயலைக் குறித்துத் தாங்கள் விசாரித்து நியாயம் செய்யுங்கள். அல்லது நானே இவனைத் தண்டிப்பதற்கு எனக்கு உடனே அதிகாரம் கொடுங்கள்!" என்றான் கந்தமாறன்.

"நண்பனே! நானே அவசியம் விசாரித்து நியாயம் வழங்குகிறேன், செம்பியன் குலத்து மன்னர்களிடம் ஒருவன் நியாயம் கேட்டு அவனுக்கு நியாயம் கிட்டவில்லை என்ற பேச்சு இது வரையிலே கிடையாது. எங்கள் பரம்பரையின் ஆதி மன்னனாகிய சிபி, புறாவுக்கு நியாயம் வழங்குவதற்காகத் தன் சதையைத் துண்டு துண்டாக வெட்டிக் கொடுக்கவில்லையா?


(தொடரும்...)

---



## சிறுவர் அரங்கம்

## பழைகவர்கள் செய்த உதவி



(நேற்றைய தொடர்ச்சி)

முன்னெல்லாம் கரையோரம் நின்றால் பளிங்கு போல அதன் தரை தெரியும். இப்பொழுதோ? வாயைக் குமட்டுவது போல சைகை செய்தது.

சரி நாம் அந்த மீன்களை எப்படிக் காப்பாற்றுவது? ஒரு நாரை சொன்னது, இங்கிருந்து சற்றுத் தூரத்தில் ஒரு குளம் இருக்கிறது. அது நடுக் காட்டுக்குள் இருக்கிறது, அங்கு கொண்டு போய் விட்டு விடலாம், பாவம் அவைகள் பிழைத்துக் கொள்ளட்டும். மனிதர்களால் தொல்லை இருக்காது.

எல்லா நாரைகளும், கொக்குகளும் ஒப்புக்கொண்டன. பகலில் இந்தப் பணியைச் செய்யக் கூடாது. மனிதர்களால் நமக்குத் துன்பம் வரலாம், அதனால் பொழுது சாய்ந்த வேளையில் இந்த வேலையை ஆரம்பிப்போம்.

உதவிக்கு நம்முடைய எல்லா நாரைகளையும், கொக்குகளையும் கூப்பிட்டுக்கொள்ளலாம் என்று கூற அனைத்தும் சரி என்றன.

மறு நாள், பகலில் அன்று மீனிடம் பேசி நாரை குளத்துக்கு வந்து தகவல் சொல்லி விட்டது. இன்று மாலை எங்கள் ஆட்கள் இங்கு வருவார்கள் தயாராய் இருங்கள்.

அதே போல் அன்று மாலை கடந்து மெல்லிய இருள் பரவிய வேளையில் ஆயிரக்கணக்கான நாரைகளும், கொக்குகளும் குளத்துக்கு வந்து அங்கிருந்த மீன்கள் மட்டுமல்ல, தவளை, மற்றும் அனைத்துப் பூச்சிகளையும் கவ்விக்கொண்டு பறந்து சென்று நடுக்காட்டில் இருக்கும் குளத்தில் விட்டு விட்டு மீண்டும் மீண்டும் வந்து எடுத்து சென்றன.

சிறுவர்களே ஒரு வேடிக்கை தெரியுமா, அதை ஒரு சில மனிதர்கள் கண்டு விட்டு அடேயப்பா பார், இன்று கொக்குகளுக்கும், நாரைகளுக்கும் நல்ல வேட்டை" எத்தனை நாரைகள்? எத்தனை கொக்குகள்? மீன்களையும், மற்றைவகளையும் கவ்விச் செல்கின்றன?

அவர்களுக்கு தெரியுமா இவைகள் மீன்களுக்கும், மற்றவைகளுக்கும் உதவி தான் செய்கின்றன என்று?

மறு நாள் காலை அந்தக் குளத்தில் ஒரு ஜீவராசிகள் கூட இல்லை, அவை அப்படியே கொக்குகள், நாரைகளின் உதவியால் வேறோர் குளத்திற்கு சென்று நிம்மதியாய் வாழ ஆரம்பித்து விட்டன.

மனிதர்கள் ஜீவராசிகள் உயிர் வாழாத அந்தக் குளத்தை முடிந்தவரை நாசம் செய்து காலப்போக்கில் அங்கு குளம் ஒன்று இருந்ததா? என்று கேட்கும் அளவில் செய்து விட்டனர். (முற்றும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தெரிந்தவன் சாதிக்கின்றான், செய்யத் தெரியாதவன் போதிக்கின்றான். – *சாக்ரட்டிஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தூய்மைப்படும் சிங்கள அரசியலும் சாக்கடையில் விழும் நம் அரசியலும்

அரசியல் என்று யாரேனும் கதைக்கத் தொடங்கினால், அவ்வளவுதான் அதை விடுங்க என்று சொல்லுமளவுக்கு நம் அரசியல் சாக்கடையாகிவிட்டது.

முன்பெல்லாம் தமிழர் அரசியலில் நேர்மையும் ஒழுங்கும் இருந்தன.

ஆனால் இன்றைய எம் தமிழர் அரசியல் என்பது மிகவும் கீழ்நிலைப்பட்டுவிட்டது.

உண்மையில் நாங்கள் அரசியல் ரீதியில் கடும் பலயீனப்பட்டு வருகின்றோம். அதேநேரம் தென்பகுதி அரசியல் தூய்மைப்பட்டு வருகிறது.

ஆம், ஆட்சியில் இருந்தபோது ஊழல் செய்த அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளை நீதிமன்றில் நிறுத்துவதென்பது சாதாரணமானவிடயமல்ல.

ஆனாலும் அதனை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மிகவும் கச்சிதமாகச் செய்து வருகிறார்.

இதன் காரணமாகத் தென்பகுதி அரசியல் தூய்மைப்பட்டு வருகிறது.

அதாவது கிளீன் ஸ்ரீலங்கா என்ற தொனிப்பொருள் தென்பகுதி அரசியலில் இருந்துதான் ஆரம்பிக்கப்படுகின்றதோ என்று எண்ணுமளவுக்கு நிலைமை உள்ளது.

ஊழல்வாதிகளை நீதிமன்றில் நிறுத்தி, அவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கின்ற ஜனாதிபதி அநுரவின் நடவடிக்கையால் தென்பகுதி அரசியல் அதிர்ந்து போயுள்ளது.

தவிர, தம் மீதும் எந்நேரமும் ஊழல் குற்றச்சாட்டு வரலாம். எந்தவேளையிலும் தாம் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தில்; தென் பகுதி அரசியல்வாதிகள் கோயில்களுக்குச் சென்று கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டு வருவ தான தகவல்களும் உண்டு.

இதில் வேடிக்கை என்னவெனில், அரச சொத்தை, பொதுமக்களுக்கு அதிலும் ஏழை மக்களுக்குக் கிடைக்க வேண்டியதைச் சூறையாடியவர்களிடம் கூட, கடவுள் நம்பிக்கை இருக்கிறது என்பதை நினைக்கும்போதுதான் எல்லாம் விந்தையாய்த் தெரிகிறது.

பரவாயில்லை. ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் அங்கு கட்சி தாவுதல், சந்தர்ப்பத்துக்குகேற்ப கூட்டுச் சேருதல் என்ற நிலைமை இல்லாதிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

ஆம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும்போது, தென்பகுதி அரசியல் முற்று முழுதாகத் தூய்மைப்பட்டுவிடும்.

அதேநேரம் எங்கள் தமிழர் அரசியல் தூய்மையை இழந்து சாக்கடைக்குள் வீழ்ந்து போகிறது.

**என்ன செய்வது எங்கள் அரசியலை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால், இவர்களால் மட்டும் எப்படி முடிகிறது என்ற கேள்வி அதிர்ச்சியோடு எழுகை பெறுகிறது.**

### நீதிமன்ற கட்டளையை மீறியுள்ளார்கள்

## தையிட்டி விகாரையை அகற்றக்கோரி போராடியவர்களுக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றக் கட்டளையை மீறியுள்ளார்கள் எனத் தெரிவித்து தையிட்டி விகாரையை அகற்றக் கோரி போராடியவர்களுக்கு எதிராக பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது போராட்டம் நடத்தியவர் சார்பாக மன்றில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா, நா.காண்டீபன் ஆகியோர் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

குறித்த வழக்குத் தொடர்பில் சட்டத்தரணிகள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் நடைபெறவிருந்த வேளை சிலரின் பெயர் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் தடையுத்தரவுகளை பெற்று இருந்தனர். நீதிமன்றினால் பெறப்பட்ட தடையுத்தரவை, சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்காது போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை அங்கு வந்த பொலிஸார் அவர்களின் பெயர் விபரங்களை வாசித்து சென்று இருந்தனர்.

அதனூடாகச் சட்டத்தின் ஏற்பாடுகளை திருப்தி படுத்தியுள்ளதாகப் பொலிஸ் தரப்பு கூற முடியாது என மன்றில் தெரிவித்திருந்தோம்.

அதேவேளை, தையிட்டி விகாரைக்கு பொறுப்பான "அமரபுர நிக்காய பீடம்" விகாரையில் பொசன் நிகழ்வுகளை நடாத்துவது இல்லை எனக் கடந்த மே மாதம் 29ஆம் திகதியே பதில் பொலிஸ்மா அதிபர், வடமாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் கடந்த மாதம் பூரணை தின வழிபாட்டிற்கு வருகை தந்த பௌத்தர்களை போராட்டக்காரர்கள் இடைமறித்ததாகவும் தமிழர்கள் விகாரையை இடித்து அழிக்க போகின்றார்கள், பௌத்தர்கள் ஒன்றிணைந்து தையிட்டிக்குச் செல்ல வேண்டும் எனச் சமூக வலைத்தளங்களில் கடும் போக்கு சிங்கள இனவாதிகள் பொய்யான தகவல்களைப் பரப்பி, இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயன்றனர்.

அவர்கள் தொடர்பில் பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்ற விடயத்தை மன்றில் சுட்டிக்காட்டி, அதற்கான ஆதாரங்களையும் மன்றில் சமர்ப்பித்துள்ளோம்.

பலாலி பொலிஸ் அதிகாரிகள் பொய்யான தகவல்களை வழங்கி மன்றை தவறாக வழிநடத்துகிறார் என்ற விடயத்தையும் மன்றில் சுட்டிக்காட்டினோம். அதனையடுத்து குறித்த வழக்கினை நீதவான் கிடப்பில் போட்டுள்ளார் எனத் தெரிவித்தனர்.

(ம-4,7,33)

## சாவகச்சேரி நகர, பிரதேச சபைக்குத் தெரிவான இருவருக்கு எதிரான வழக்கு இன்று பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபைக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தேர்வான இருவர் அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்களாகப் பதவியேற்பதற்கு எதிராகத் தடைவிதிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல்வழக்குகளை இன்று காலை பரிசீலனைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

சாவகச்சேரி நகரசபை அதன் நகர பிதாவைத் தெரிவு செய்வதற்காக இன்று பிற்பகலில் கூடவிருக்கையில் இந்த மனுக்களை இன்று காலை பரிசீலனைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

2025 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின்போது சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தேர்வான இருவரும் அந்தந்தச் சபை எல்லைப் பரப்புக்குள் தம்மை ஒரு வாக்காளராகப் பதிவு செய்வதற்குத் தகுதி அற்றவர்கள் என்ற அடிப்படையில் இருவரின் உறுப்புரிமைகளையும் இரத்துச் செய்யத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடக் கோரி இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனுவைப் பரிசீலித்து உடனடியாக நடைமுறைக்கு வரக்கூடியதாக இடைக்காலத் தடைவிதிக்கும் படியும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இரண்டு வழக்குகளும் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த போதும் ஏனைய வழக்குகள் இருந்த காரணமாக இன்று காலை இந்த வழக்குகளைப் பரிசீலனைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் முடிவு செய்தது.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவும் எதிர் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரனும் முன்னிலையாகின்றனர்.

(ம-4,7,33)

### குற்றப்புலனாய்வுப் பிரிவினர்

## வவுனியா சிறைச்சாலைக்குள் அதிரடியாக நுழைந்து விசாரணை

வவுனியா சிறைச்சாலைக்கு வருகை தந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பாக நேற்றுக் காலை சிறைச்சாலைக்குள் நுழைந்த சிஐடி குழுவினர் வவுனியா சிறைச்சாலையை சோதனை செய்துள்ளதுடன் அங்கு தங்கியிருந்து கடமையில் ஈடுபட்ட அதிகாரிகளிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேநேரம் வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலையில் பணியாற்றும் பத்திற்கு மேற்பட்டவர்களை விசாரணைக்காக அநுராதபுரம் அழைத்துச் சென்றுள்ளனர்.

முன்னதாக அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் ஜனாதிபதி பொது மன்னிப்பின் பேரில் சட்ட விரோதமாக விடுவிக்கப்படமை குறிப்பிடப்பட்டிருந்தமை நாட்டில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-4,7,250)

## மனோகரக் குருக்களின் மறைவு கேட்டு துயரடைகின்றோம்

### சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

ஆகம வைதீக சிரோன்மணி சிவஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம் எனச் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மனோகரக் குருக்களின் மறைவை முன்னிட்டு சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியம் வெளியிட்ட இரங்கல் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.கோப்பாய் பிரதேசத்தை பூர்வீகமாகவும் வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாத சுவாமி ஆலய பரம்பரைக் குருவாகவும் பிரதம குருவாகவும் நீண்டநாள் இறை சேவை செய்தவரும் சர்வதேச இந்து மதக குருமார் ஒன்றியத்தில் நீண்ட காலமாக தலைவராக இருந்து சமய, சமூக சேவைகளை ஆற்றிய வருமாகிய,


"ஆகம வைதீக சிரோன்மணி" சிவஸ்ரீ. பரமேஸ்வரக்குருக்கள் மனோகரக் குருக்கள் அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு துயர்பகிர்கின்றோம்.

அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய சிவன்தாழ் பிரார்த்திக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 05

புருசோத்தமன்



மாண்புமிகு Dr.K.கைலாஷ்நாதன்
புதுவை மாநிலத் துணை ஆளுநர்

புதுச்சேரிக் கம்பன் கழகத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான கம்பன் விழா 2025 மே 9, 10, 11 ஆகிய மூன்று தினங்கள் இடம்பெற்றன.

முதல் நாள் நிகழ்வு கம்பனின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்தலுடன் ஆரம்பமாகியது.

அரங்க நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்றது.

தமிழகத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து என்பது மனோன்மணியம் சுந்தரனார் பாடிய **நீராடும் கடலுடுத்த...** என்பதே தமிழ்த் தாய் வாழ்த்தாக இசைக்கப்படும்.

எங்கள் யாழ்ப்பாணத்தில் பாரதியார் இயற்றிய **வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி...** என்பதே தமிழ்த் தாய் வாழ்த்தாக இருந்தது.

எனினும் தற்போது மனோன்மணியம் சுந்தரனாரின் **நீராடும் கடலுடுத்த...** என்பது தமிழ் வாழ்த்தாக இங்கும் பாடப்படுகின்ற வழமை வந்துள்ளது.

ஆனால் புதுச்சேரி மாநிலத்தில் பாவேந்தன் பாரதிதாசனின் **வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே...** என்ற பாடலே தமிழ்த்தாய் வாழ்த்தாக இசைக்கப்படுகிறது.

இசை வல்லுநர்கள் சேர்ந்து இப்பாடலைப் பாடிய போது, அரங்கிலும் அவையிலும் இருந்த அனைவரும் ஒன்று சேர்ந்து பாடியதைக் கண்டு வியந்தேன்.

அதிலும் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், சட்ட சபை உறுப்பினர்களும் சேர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடினர்.

புதுச்சேரி மாநிலத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தாக உள்ள பாவேந்தன் பாரதிதாசனின் பாடலை நம் வாசகர்கள் அறியும் பொருட்டு அத் தமிழ்த்தாய் வாழ்த்தை இவ்விடத்தில் தருகின்றோம்.

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகழ் நீயே என் தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே!
வீரனின் வீரமும், வெற்றியும் நீயே!
தாழ்ந்திடு நிலையினில் உனைவிடுப் பேனோ
தமிழன் எந்நாளும் தலைகுனி வேனோ
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நின்உயிர் நான்மறப் பேனோ?
செந்தமிழே உயிரே நறுந் தேனே
செயலினை மூச்சினை உனக்களித் தேனே
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே!
முந்திய நாளினில் அறிவும் இலாது
மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தாமரைக் காடு பூத்தது போலே
செழித்த என் தமிழே ஒளியே வாழி!
செழித்த என் தமிழே ஒளியே வாழி!
செழித்த என் தமிழே ஒளியே வாழி!
செம்மையைச் செய்பவள் நீயே

தமிழ்த் தாய் வாழ்த்துடன் கம்பன் விழாவின் முதல்நாள் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

புதுவைக் கம்பன் கழகத்தின் தலைவரும் புதுச்சேரி சட்ட சபை உறுப்பினருமான செல்வகணபதி தலைமையுரையாற்ற, மாநில முதலமைச்சர் ந.இரங்கசாமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

தொடக்கவுரையை புதுச்சேரி துணை ஆளுநர் முனைவர் கே.கைலாஷ்நாதன் தமிழில் ஆற்றினார்.

கேரளா மாநிலத்தைச் சேர்ந்த அவர் தமிழில் தொடக்கவுரையை ஆற்றியமை அங்கு பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

ஆக, புதுவை மாநில முதல்வர் வரவேற்புரையாற்ற, துணை ஆளுநர் தொடக்கவுரை நிகழ்த்த, கம்பன் விழா ஆரம்பமாகின்ற பெருமை புதுச்சேரிக் கம்பன் கழகத்திற்கு மட்டுமே உண்டு எனலாம்.

முதல்நாள் காலை அமர்வு இந்திய உச்ச நீதிமன்றத்தின் மேனாள் நீதியரசர் வி.இராமசுப்பிரமணியன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 2024 ஆம் ஆண்டுக்



கம்பன் விழாவின் நிகழ்வுகளை உள்ளடக்கிய கம்பன் விழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. கூடவே அறக்கட்டளை விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் கம்ப காவலர் வழக்குரைஞர் முருகேசன் பானுமதி அறக்கட்டளைப் பரிசு அடியேனுக்குக் கிடைக்கப் பெற்றது.

இதனை புதுவை மாநிலப் பொதுப்பணி அமைச்சர் லட்சுமி நாராயணன் வழங்கி வைத்தார்.

(திங்கள் தொடரும்...)



கம்பகாவலர் வழக்குரைஞர் முருகேசன் பானுமதி அறக்கட்டளைப் பரிசு வழங்கிய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி காணி...

நேற்று வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளைத் தவிர்த்து, அதனை சூழவுள்ள ஏனைய காணிகளை மாவட்ட செயலரிடம் கையளிக்கப் பணிக்கப்பட்டுள்ளது. மாவட்டச் செயலர், பிரதேச செயலர் ஊடாக காணி உரிமையாளர்களுக்கு காணிகளை கையளிப்பார்.

அதேவேளை தனியார் காணிக்குள் விகாரை அமைக்கப்பட்டு இருந்தால், அந்தக் காணி உரிமையாளர்களுக்கு காணியின் பெறுமதி நஷ்டஈடாக வழங்குவது அல்லது மாற்றுக் காணியை வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

விகாரைப் பிரச்சினையை நீண்டு செல்ல அனுமதிக்க முடியாது. அதனை ஒரு மாத காலத்திற்குள் முடிக்க முடிவெடுத்துள்ளோம் என மேலும் தெரிவித்தார். (ம-7,4,33)

மஹஜன சம்பத
திகதி 2025.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 5858
X 8 5 7 2 7 6
அத சம்பத
X 7 2 7 6
சீட்டிழுப்பு இலக்கம் 0433
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1888
N 02 14 25 68 N
Double Chance 85621

மெகா பவர்
திகதி 12/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2206
D 15 17 42 63 64

NLB ஜய JAYA
திகதி 2025.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 0126
F 2 6 9 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4100
சீட்டிழுப்பு திகதி 12.06.2025
Q 17 24 31 69
Q

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 1167
தனுசு 17 29 54 62 தனுசு
09852 26

## விடுவிக்கப்பட்ட...

ளம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை (12) மனித மண்டை ஓட்டுடன் கூடிய எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் விடுவிக்கப்பட்ட கற்கோவளம் இராணுவ முகாம் அருகில் உள்ள காட்டுப் பகுதியிலேயே இவ் மனித மண்டையோட்டுடன் கூடிய எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,4,33,60)

## 400 போதை...

பிற்பகல் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன் மேலும் ஒரு சந்தேகநபரும் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்டுதலின் கீழ் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயரூபன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த 22 வயதான நபரும் சந்தேகத்தின் அடிப்படையில் 19 வயதான நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இரு சந்தேகநபர்களிடமும் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் இருவரும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4,30)

## டைனமற்...

யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் வெடிமருந்துகளை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,4)

## பேராசிரியர்...

காலமானார்.

சுன்னாகத்தைச் சொந்த இடமாகக் கொண்ட பேராசிரியர் தில்லைநாதன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தவர்.

2022ஆம் ஆண்டு இவருக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

தமிழ் சார்ந்து பல நூல்களை எழுதிய இவரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். (ந)

## யாழ்.மாநகர...

யாழ்.மாநகர சபை 45 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையாகும். அதனால் 23 ஆசனங்களை வைத்திருக்கும் கட்சியே ஆட்சியை அமைக்க முடியும். இம்முறை எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டிருக்காத நிலையில் கட்சிகள் கூட்டுக்களை அமைத்து ஆட்சியை அமைக்கவுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி 13 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் 12 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

அதில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் யாழ்.மாநகர சபையின் முதல்வர் பதவிக்காகப் போட்டியிடவுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் முதல்வர் பதவிக்கு விவேகானந்தராஜா மதிவதனியின் பெயரையும் பிரதி முதல்வர் பதவிக்கு இம்மானுவேல் தயாளனின் பெயரையும் பரிந்துரைக்கத் கட்சி தீர்மானித்துள்ளது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் முதல்வர் வேட்பாளரை ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி ஆதரிக்கும். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் முதல்வர் பதவிக்கு கனகையா ஸ்ரீ கிருஷ்ணாவும் பிரதி முதல்வர் பதவிக்கு துரைராஜா ஈசனும் பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் முதல்வர் பதவிக்கு சுந்தரமூர்த்தி கபிலன் போட்டியிடுவார் என அக்கட்சியின் யாழ்.மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இந்நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முதல்வர் வேட்பாளருக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன ஆதரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7,4,33)

## வவு...

யம் முன்பாக நேற்று மாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா குருமன்காடு பகுதியில் இருந்து கண்டி வீதியூடாக ... மோட்டார் சைக்கிள் காமினி மகா வித்தியாலயம் முன்பாக பூங்கா வீதியில் திரும்ப முற்பட்டவேளை குறித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் வேகமாக வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உட்பட மூவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர்டன சம்பத
12.06.2025 வெற்றி வாரம் 566
Z 7 6 2 5 8 8
63672
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,038,886.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2832
சீட்டிழுப்பு திகதி 2025.06.12 தினம் வியாழக்கிழமை
15 59 62 76 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,810,130.40

சனிதா
திகதி 12.06.2025 வெற்றி வாரம் 4993
37 39 47 60 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,038,982.00
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு 57841


சசிரி
வெற்றி வாரம் 702
சீட்டிழுப்பு திகதி 12.06.2025
வியாழக்கிழமை
09 16 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,058,960.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4544
சீட்டிழுப்பு திகதி 12.06.2025 தினம் வியாழக்கிழமை
06 07 30 38 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,068,286.00
102629

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 16 02 18 43 63
2008
12.06.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.577,887,232.00

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2658
சீட்டிழுப்பு திகதி : 2025.06.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,204,612.80
04 05 12 75 E
162236

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆலயங்களில் அதிகாலையில்
பக்திப் பாடல்களை
தன்னியக்கமாக ஒலிக்கச் செய்யவும்.
ஒவ்வொரு மணி நேர இடைவெளியிலும்
ஒலியினை எழுப்பவும்.
திருவிழா நேரங்களிலும் அல்லது
சிறப்பு தினங்களிலும் மேளக்
கச்சேரிகளை தன்னியக்கமாக
ஒலிக்கச் செய்யவும் சிறப்பாக
வடிவமைக்கப்பட்ட சாதனத்தை
நிறுவி மற்றும் பராமரிக்கும்
விரிவான சேவையை
நாங்கள் மிகக் குறைந்த
விலையில் வழங்குகிறோம்.

1 YEAR WARRANTY



UBell
Manipay
Whatsapp
074 231 9527
(1223)

# அகமதாபாத் விபத்து
## ஜனாதிபதி அநுர இரங்கல்

அகமதாபாத் விமான விபத்து தொடர்பாக மிகுந்த கவலையடைவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, விமானத்தில் பயணித்த அனைவரின் குடும்பத்தினருக்கும் தமது இரங்கலை தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த சோகமான தருணத்தில் இலங்கை மக்கள் இந்தியாவுடன் இருப்பதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அகமதாபாத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற விமான விபத்தில் 240 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ம-4)

Tamil & English Medium
கணக்கீடு
திரு.க.பா.பாலகஜன்
B. Com(Jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip-in-Edu(OUSL), M.Com(HONS) Acc.Spl
A/L 2025 & DAY, 2026,2027
சாதித்தவர்களைக் கேளுங்கள் ....
சாதனைக்கான வழியினை ....
புதிய தேர்ச்சிகள் ஆரம்பம்
பிரத்தியேக வகுப்புக்கள்
KBK • கந்தர்மடம் • கொழும்புத்துறை • zoom
NEC யாழ். நகர்
ST மீசாலை
(C-3184)
Seminar, Paper Class, Exam
தனிப்பாட அனுமதி வழங்கப்படுகின்றது
நேர அட்டவணை மற்றும் உங்கள் அனுமதிகளுக்கு
077 452 0043

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

சுத்தமான , சுகாதாரமான முறையில்
பறிக்கப்பட்ட தரமான வேப்பம்பூ
கொள்வனவு செய்யப்படும்
கொள்வனவு விலை 1 Kg - 400/-
தேவைப்படும் அளவு 100 Kg
மொத்தமாகவோ அல்லது சிறு அளவிலோ
கொள்வனவு செய்யப்படும் (C-3193)
தொடர்புகளுக்கு : 077 590 2467

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள் , எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்
பரிபூரணம்
சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35.000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695, 077 429 0613
(C-3186)

# மரண அறிவித்தல்

தோற்றம் 1954 - 05 - 03



மறைவு 2025 - 06 - 10

## ஆழ்வான் இரத்தினம்

நாகநாதன் வீதி கொடிகாமத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வான் இரத்தினம் அவர்கள் 2025.06.10 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வான் - உமையாள் தம்பதிகளின் அன்பு மகனும் பவா அவர்களின் பாசமிகு கணவரும் பிரதிபன்(சுவிஸ்), பிரசன்னா(சன்னா - சன்வியூ உரிமையாளர், கொடிகாமம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகிலா(சுவிஸ்), துஷ்யந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரகதன்(சுவிஸ்), பிரகதி(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13.06.2025 வெள்ளிக்கிழமை பி.ப 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் கட்டைபறித்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 757 [illegible]

நாகநாதன் வீதி,
கொடிகாமம்.
(C-3191)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மலர்வு 02.04.1958
உதிர்வு 16.05.2025

கடந்த 16.05.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் சோமசுந்தரம் சிவபாலன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளைமறுதினம் (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ள மடத்திலும் சபிண்டீகரண கிரியைகள் காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

குடும்பத்தினர்
077 211 1148
(C-3194)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.[illegible], பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org